Reg sered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15




# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி




மலர் 13 சித்திரை 5 ஸபர் 21 (18—4—71) ஞாயிற்றுக்கிழமை இதழ் 65

# சீனி, மண்ணெண்ணெய் கப்பலிலும் ரயிலிலும் வந்தன

## இராணுவத் தளபதியும் அமைச்சர் மைத்திரியும் அனுராதபுரம் விஜயம்

கோட்டை, சனி

நீர்ப்பாசன, மின்துறை அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்காவும், இராணுவத் தளபதியும் நேற்று அனுராதபுரத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிந்ததுடன் இராணுவத் தொடர்பு, அதிகாரி அரசாங்க அதிபர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்தி, அனுராதபுரம் சகஜநிலையை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதுகாறும் மூடப்பட்டிருந்த மதவாச்சி பொலிஸ் நிலையத்தை மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

இடைக்காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்களைப் பொதுமக்கள் சகித்துக் கொண்டு இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் அளித்த ஒத்துழைப்புக்காக அமைச்சர் திரு. மைத்திரிபாலா அநுராதபுர மக்களுக்கு நன்றி செலுத்தினர்.

### மாத்தளை விஜயம்

அனுராதபுர விஜயத்தை முடித்துக்கொண்டு, மாத்தளைக்கும் விஜயம் செய்த அமைச்சர் மைத்திரிபாலவும் இராணுவத்தளபதி திரு. சேபால ஆட்டிகலவும், மாத்தளைத்தொகுதி எம்.பி, முன்னாள் இராணுவத் தளபதி திரு ரிச்சார்ட் உடுகம, ரத்தோட்டை உறுப்பினர் எஸ். பி. பாலேகம ஆகியோருடன் மாத்தளை மாவட்டத்தில் நிலவும் நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

......

### பரீட்சை பின்போடபட்டது

கோட்டை சனி

இம்மாதம் 19ந் திகதி நடைபெறவிருந்த ஜீ' சி, ஈ உயர் தரகலைப்பரீட்சை பின்போடப்பட்டது.

நாட்டிலுள்ள பாடசாலைகளும் குறிப்பிட்ட திகதியில் ஆரம்பமாகாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

—...

### அபிவிருத்தி நிர்மாண கூட்டுஸ்தாபனம்

கோட்டை சனி

உத்தேச அபிவிருத்தி நிர்மான் கூட்டுஸ்தாபனம் நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சின கீழுள்ள கூட்டுஸ்தாபனங்கள் ஆகியவற்றின் வேலைகளைக்கவனிக்கவுள்ளது.

**ஊரடங்கு நேரம்**
இன்று மாலை
6-00
மணி முதல்
நாளை காலை
6-00
மணி வரை

## மிளகாய் பயிரிடுவோருக்கு மேலதிகபர்மிட் வழங்க உத்தரவு

### மேலும் சரக்குகள் வருகின்றன

— பெரி. சுந்தரலிங்கம் —

யாழ்ப்பாணம், ஞாயிறு

மண்ணெண்ணெய் ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்ட விசேடக் கப்பல் நேற்றுப்பகல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இதேவேளையில் ரயில்மார்க்கமாகவும் மண்ணெண்ணெயும், மூன்று ரயில் பெட்டி சீனியும் யாழ்ப்பாணம் வந்திறங்கின.

கப்பல் மார்க்கமாகவும், ரயில் மார்க்கமாகவும் மேலும் சீனியும், மண்ணெண்ணெயும், இதர அத்தியாவசியப் பொருட்களும் சில நாட்களில் வந்திறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மிளகாய்ப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள கமக்காரர்களுக்கு ஆயிரம் மிளகாய்ச் செடிகளுக்கு 2 போத்தல்கள் விகிதம் மேலதிகமாக மண்ணெணெய் பர்மிட் வழங்குமாறு காரியாதிகாரிகளுக்கு அரசாங்க அதிபர் திரு விமல் அமயசேகரா உத்தரவிட்டுள்ளார்.

தண்ணீர் இறைக்கும் பம்புகளின் உபயோகத்தை உத்தேசித்தே இந்த மேலதிக பர்மிட் வழங்கப்படுகிறது.

தற்போது தட்டுப்பாட்டிலிருக்கும் சீனியும், மண்ணெண்ணெயும்நேற்று வந்திறங்கியுள்ளதாகவும் மேலும் சரக்குகள் இரண்டொரு நாளில் வந்தடையுமென்று எதிர்பார்க்கப் படுவதாலும், பொதுமக்கள் தேவைக்கதிகமான அளவு இப்பொருட்களை வாங்கிக் கையிருப்பில் வைத்து 'செயற்கைத் தட்டுப்பாட்டை' ஏற்படுத்த அவசியமில்லை எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

சீனி ரேஷனின் அளவையும் அதிகரிக்கத் தான் யோசித்திருப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

உயிரிழந்தோர்

## குடும்பத்தினருடன் வானொலிப் பேட்டி

கோட்டை, சனி

பயங்கரவாதிகளை அடக்கி, நாட்டைக் காக்கும் நற்பணியில் உயிரிழந்த இராணுவ, பொலிஸ் அதிகாரிகளின் குடும்பங்களைச் சேர்ந்த நபர்களுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிருபர்கள் நடத்திய பேட்டிகள் 18-ந் திகதியன்று காலை 7 மணிக்கும், 1 மணிக்கும் சிங்கள சேவையில் ஒலிபரப்பப் படவிருக்கின்றன.

நாட்டைக் காக்கும் நற்பணியில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கான அரசாங்கத்தின் நிவாரண நிதிக்கு இதுவரை ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் சேர்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவைக் கொல்லவும், அவரது தனிப்பட்ட வாசஸ்தலமான ரோஸ்மிட் பிளேஸ் பங்களாவைக் குண்டெறிந்து தகர்க்கவும் பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்ததைப் பற்றி கைது செய்யப்பட்ட இரு பயங்கரவாதிகளுடன் பேட்டிகள் நடத்தி அதனை வானொலியில் பன்முறை (சிங்கள சேவையில்) ஒலிபரப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

......

### இருவருக்கு காயம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

மண்டதீவில் நேற்று முன்தினம் நடந்த கோஷ்டி சண்டையில், இருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தலோறன்ஸ், பூபாலராஜ் ஆகியோர் சிகிச்சை பெற்றுவருகின்றன.

## நவீன மார்க்கட் வேலைகள் ஆகஸ்டில் முடிவடையும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம், நவீன மார்க்கட்வேலைகள் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் முடிந்துவிடும் என்று 'மைநர்' ஸ்தாபன அதிபர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சில வசதியீனங்கள் காரணமாக மாநகரசபை தந்த கால எல்லைக்குள் வேலைகளை முடிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அக்கால எல்லைக்குள் நவீன மார்கட்டை திறக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், ஒருபகுதியை பூரணமாக முடித்துக்கொடுக்கக் கூடிய முயற்சிஎடுக்கப்படும்.

கட்டடவேலைகள் அநேகமாக எல்லாம் முடிவடையும் தருவாயிலிருக்கின்றன. நவீனமார்க்கட்டுக்கான மின்சார இணைப்புவேலைகளும் நடைபெற்றுவருகின்றன. முன்னர் மேற்குப்பக்கவேலைகள் முடிவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய நோய் சிகிச்சையில் புது முறை கண்டுபிடிப்பு

லண்டன், ஏப் 17

இருதய வியாதிக்காரருக்கு நோய்ப் பரிசோதனை நடத்தி உடனுக்குடனேயே சிகிச்சையளிக்கும் புரட்சிகரமான முறையொன்றை ஸ்கொட்லந்தைச் சேர்ந்த வைத்திய விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கிறார்கள்

இன்றுவரை நோயாளிகளின் இருதயத் துடிப்பு மின்சாரசக்தியால் இயங்கும் சாதனமூலம் ஒரு வரைபடமாகக் கிறப்பட்டு, பொதுவாக வரைபடங்கள் உடனடிப் பரிசிலனைக்கு வைத்தியநிபுணர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின் வைத்திய நிபுணர்களின் அறிக்கையைப் பார்த்து அந்நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது

இதற்குச் சில மணி நேரமாவது செலவாகிறது. இருதய வியாதியுள்ள நோயாளிகளைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு கணமும் முக்கியமானது. எனவே நெஞ்சுத்துடிப்பைப் பதிவு செய்யும் சாதனம் அளித்த வரைபடத்தைப் பார்த்து உடனடியாகச் சிகிச்சையளிக்கவேண்டியது மிக அவசியமாகிறது.

புதியமுறை மூலம் இருதயத் துடிப்புச் சாதனம் வரைபடமாக வரைய, அதனை தொலைபேசி மூலம் வைத்தியநிபுணர்கள் கட்டறிந்து கொள்ளலாம் இருதயத் துடிப்புச் சாதனம் நோயாளியின் இருதயத் துடிப்பை வரைபடமாக வரையும்பொழுது கூடவே ஒரு ஒலியும் எழும்புகிறது. இந்த ஒலியைத் தொலைபேசி மூலம் வைத்தியநிபுணருக்கு அனுப்ப, அங்குள்ள ஒரு சாதனம் இவ்வொலியை மீண்டும் ஒரு வரைபடமாகச் சில நிமிடங்களில் பதிவு செய்துவிடுகிறது. இதனால் ஒரிரு நிமிடங்களிலேயே வைத்தியர்கள், நோயாளிக்கான அவசர சிகிச்சைகளை மேற்கொண்டுவிட முடிகிறது.

## பாதுகாப்பு குழுக்கள்

கோட்டை சனி

நாட்டின் சகல பகுதிகளிலும் மக்களது உயிர், பொருள் ஆகியவற்றைப் பாதுகாக்க அரசாங்கம் பாதுகாப்புக்குழுக்களை அமைக்கவிருக்கிறது. கிராமசேவையாளர்கள் கிராமங்களில் அமைக்கவிருக்கும் பாதுகாப்புக்குழுக்களுக்குத் தலைமை தாங்கவுள்ளார்கள். கொழும்பில் இக்குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கொள்ளை

கோட்டை, சனி

மாகந்துர, புலத்கொஹுபிட்டிய, கலேஎல்ல, விக்பத்த மஹ விலாச்சியா ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுச்சங்கங்களில் பலவற்றைப் பயங்கரவாதிகள் கொள்ளையடித்துள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

## காணிக்கச்சேரி பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள எட்டு காரியாதிகாரி பிரிவில் உள்ள படித்த வாலிபர்களுக்கு விஸ்வமடு காணி வழங்குவதற்காக இம் மாதம் 18-ம் திகதி நடாத்தப்படவிருந்த காணிக்கச்சேரி காலவரையறையின்றிப் பின்போடப்பட்டுள்ளது.

## புதிய வீதிகள் அமைக்கும் திட்டம்

அரியாலை, சனி

நெடுஞ்சாலைகள் அமைச்சு நாட்டில் புதிய வீதிகளை அமைக்கும் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

புதிய வீதிகள் அமைப்பது பற்றிய விபரங்களை மாவட்டப் பொறியியலாளர்கள் ஆட்சி மன்ற உறுப்பினர்களிடம் கேட்டுள்ளனர். அவர்களுடைய தொகுதிக்கான வேலைகள் பற்றிய விபரங்களை சமர்ப்பிக்கும்படி அவர்கள் வேண்டியுள்ளனர். இப் புதிய திட்டத்தினை நெடுஞ்சாலைகள் அமைச்சு ஐந்து வருடத்தின் கீழ் ஆரம்பிக்க உள்ளது.

சுழிபுரம், சனி

வழக்கம்பரை சன சமூக நிலையத்தினர் வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடாத்தும் கூட்டுப்பிரார்த்தனை சமய வகுப்புகள் யாவும் காலவரையறையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார்.

கலைவளர்ச்சி மன்றத்துக்கு

## கலையரசின் புகழ்மாலை

தாவடி, சனி

'நம்மவரை நாமே கணிப்பதில்லை' என்ற உறுத்தல் ஈழத்துத் தமிழ்க்கலையுலகில் உள்ள ஒரு குறைபாடுதனை நிவர்த்தி செய்துவரும் இம்மன்றத்தை எவ்வளவு போற்றினாலும் தகும்' கலையரசு திரு. க. சொர்ணலிங்கம் தாவடி காந்திகலைவளர்ச்சி மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அனுப்பிய ஆசிச் செய்தியில் மேற்கண்டவாறு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## பாம்பு தீண்டி மரணம்

குருநகர், சனி

கிளிநொச்சியில் பாம்புக் கடிக்கு இலக்கான ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்ட பொழுது வழியிலேயே மரணமானார். 25 வயதான இந் நபரை முதல்நாள் இரவு அரவம் தீண்டியதாகவும் மறுதினம் இவர் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டபொழுது மரணமானதாயும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

## நியமனம்

சுழிபுரம், சனி

பிரபல வர்த்தகரும், சமூக சேவையாளருமான சங்கானை மேற்கைச் சேர்ந்த திரு. வி எஸ். இராசையா உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சரால் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சகல கூட்டுறவு நிறுவனங்களையும் மேற்பார்வை செய்யும் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## மாணவர்கள் இன ஒற்றுமையை வளர்க்கவேண்டும்

அரியாலை, சனி

மாணவர்கள் தமக்கு மன நம்பிக்கை, ஆத்மீகவளர்ச்சி அமைதி ஆகியவற்றைத் தரத்தக்க வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சமீபத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் உரையாற்றிய வண ஜி. டெஞ்சில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் ஒவ்வொரு பிள்ளையும் தான் பயிலும் மொழி தனது தாய்மொழியாக இருக்க வேண்டும், பல இன மக்கள் வாழும் இந் நாட்டில் பாடசாலையில் மாணவர்கள் இனவாரியாகப் பிரிந்துநின்றால் பாகுபாடுகள் பேதங்கள் அதிகரித்து வரும். எனவே மாணவர்கள் இத்தகைய ஒருநிலை புருவாகாமல் இன ஒற்றுமையை வளர்க்கவும் அமைதியை நிலைநாட்டவும் பாடுபடவேண்டும்.

## வரி விளம்பரம்

### தேவை

மிக்விசையால் இயங்கும் லோன்றியில் றைனிங் வேலையில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. மூஷினா இன்டஸ்றீஸ் லிமிட் இருபாலைவீதி, கோண்டாவில். 2473

## 'மிளகாய் உற்பத்தியாளருக்கு உதவி'

சுழிபுரம், சனி

சுழிபுரம் பகுதியில் மிளகாய் உற்பத்தியில் நல்ல பலன் பெறும் இச்சமயத்தில் நீர்ப்பாய்ச்சுவதற்கு முக்கிய தேவையான மண்ணெண்ணை தட்டுப்பாடின்றிக்கிடைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரும் ஓர் அவசர தந்தியை வடபகுதி அரசாங்க அதிபருக்கு சுழிபுரம் கிராம சபைத்தலைவர் திரு சு கந்தசுவாமி அனுப்பிவைத்துள்ளார். தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைப் பாவனைக்குக் கொண்டுவந்தால் துலா மூலம் நீர் இறைக்கும் மாற்று நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள முடியாதிருப்பதாயும் அரசாங்கத்தின் ஆலோசனைப்படி அதிக கடன்பட்டு அதிக அளவில் மிளகாய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஏழைக் குடியானவர்களின் மேல் கருணை காட்டித் துரித நடவடிக்கை எடுக்கும்படியும் எண்ணெய் பங்கீடு செய்வதில் மிளகாய்ச் செய்கையாளருக்கு முதலில் உதவும்படியும் கிராமசபைத் தலைவர் தமது தந்தியில் கேட்டுள்ளார்.

## பெர்லின் பிரச்னை: நான்கு வல்லரசுகள் ஆலோசனை

பெர்லின், ஏப்ரல் 17

உலக வல்லரசுகள் நான்கும் பெர்லின் பிரச்னை பற்றிக்கூடி ஆராய்கின்றன. பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், சோவியத் யூனியன் ஆகிய நான்கு வல்லரசுகளும் தமது பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துகின்றன.

இப்பேச்சுவார்த்தையில் சோவியத் யூனியன் 12 பக்கம் அடங்கிய ஆலோசனை நகலொன்றை சமர்ப்பித்துள்ளது. இதுபற்றிய விபரம் எதுவும் தெரியாவிட்டாலும் பெர்லின் பிரச்னையைத் தீர்ப்பதற்கான மூன்று ஆலோசனைகளை இதில் சோவியத் யூனியன் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சுழிபுரம், சனி

வெண்டி, கத்தரி, மிளகாய், உருளைக்கிழங்கு ஆகிய காய் கறிகள் சுழிபுரம் சந்தையில் மிக்க மலிவாகவுள்ளன.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-00 1 30
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்ப்பாணம் மறு அறிவித்தல் வரை தினசரி காலை 10-00 பி. ப 1. 15
மாஸ்ரர் பிரபாகர் பேபி சுமதி - லெட்சுமி நடித்த
வா ராஜா வா

3-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30
எம். ஜி. ஆர். (இருவேடங்களில்) சரோஜாதேவி ரத்னா நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா மனோகர், அசோகன், ஆனந்தன் நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
விநாயகா பிக்சர்ஸ்
மூன்றெழுத்து
(மர்மச்சித்திரம்)

நாகம்ஸ் சினிமா
(சுன்னாகம்
தினசரி 10-30க்கு மட்டும்
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி நடித்த
கலங்கரை விளக்கம்

வெஸ்லி சினிமா
காவிப்பாய்
தினசரி 10 00, 1-30 மட்டும்
ஜெய்சங்கர் - விஜயகுமாரி நடித்த
குழந்தையும் தெய்வமும்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, 1-30
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
அன்பளிப்பு

இன்று மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
காலை 10 30 பி ப 1-30
சிவாஜி - கே. ஆர் விஜயா நடித்த
தங்கை

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME

தினசரி பி. ப. 1-30
சிவாஜி-சௌகார் ஜானகி நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

REGAL - Jaffna
Daily 10-00a.m. 1 15p.m.
Audi Murphy
in
BULLET FOR A BAD MAN

வியாபாரிகளே! பொதுமக்களே!
"ஓர் அரிய சந்தர்ப்பம்"
புதிய சந்தை
உங்களுக்குத் தேவையான காய்கறிகளை நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து புத்தம் புதிதாகக் குறைந்த விலையில் வாங்க வேண்டுமா? விரைந்து வாருங்கள்
கோண்டாவில் கிழக்கில், பலாலி றோட்டுச் சந்தியில் (கொடித்தூக்கி ஆலடிச் சந்தி) புதுவருடத்தினத்தன்று புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட
★ புதிய சந்தைக்கு ★
தினமும் காலை 6-00 மணிக்கு ஆரம்பிக்கப்படும் இச்சந்தைக்கு மாவட்டத்தின் நாலாபக்கத்திலிருந்தும் விற்போரும் வாங்குவோரும் திரள் திரளாகக் குவிகின்றனர். நீங்களும் உங்கள் தேவைகளுக்கு முந்திக்கொள்ளுங்கள். 3242


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் - மலேஷியா பாதுகாப்புக்கு ஐந்து சாம்ராஜ்ய நாடுகள் ஒப்பந்தம்

லண்டன், ஏப். 17

சிங்கப்பூர், மலேஷியா ஆகிய இரு நாடுகளும் வெளிநாடொன்றின் தாக்குதலுக்குள்ளானால் பிரிட்டன், நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய சாம்ராஜ்ய நாடுகள் உடனே உதவிக்கு வரும் இதற்கான ஓர் ஏற்பாட்டை இந்த ஐந்து நாடுகளும் புதிதாக செய்து கொண்டுள்ளன.

லண்டனில் கூடிய மேற்படி ஐந்து சாம்ராஜ்ய நாடுகளின் பாதுகாப்பமைச்சர்கள் சிங்கப்பூர் மலேசியா ஆகியவற்றின் பாதுகாப்பு சம்பந்தமாக ஓர் உடன்பாட்டைசெய்துகொண்டுள்ளன.

லண்டனில் சிங்கப்பூர் மலேசியா ஆகியநாடுகளின் பாதுகாப்பு சம்பந்தமாக புதிய இராணுவ அமைப்பொன்றை ஏற்படுத்த ஐந்து சாம்ராஜ்ய நாடுகளின்பாதுகாப்பு அமைச்சர்கள் கூடி ஆலோசனைசெய்தனர். பிரிட்டன், நியூசிலன்ட், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இப்பாதுகாப்பு அமைச்சர்கள், மலேசியா அல்லது சிங்கப்பூர் மீது வெளியார் ஆக்கிரமிப்புச் செய்தால் அது பற்றி உடனடியாக ஐந்து நாடுகளும் ஆலோசனை செய்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி முடிவெடுப்பதென்று உடன்பாடு செய்து கொண்டுள்ளனர் மலேஷியா வெளியாரின் தாக்குதல்களுக்குள்ளாகும் பட்சத்தில் அந் நாட்டை பிரிட்டன் பாதுகாக்குமென 1957ம் ஆண்டு இருநாடுகளும் உடன்பாடு செய்துகொண்டன.

1971ம் ஆண்டு பிரிட்டன் சிங்கப்பூர் மலேஷியா போன்ற இடங்களிலிருந்து தனது படைகளை விலக்கிக் கொள்வதென்று முன்பு செய்த முடிவைவொட்டி 1969ம் ஆண்டிலிருந்து இவ்விரு நாடுகளும் தமது படைகளை வலிமைப் படுத்தத் தொடங்கின. அதே நேரத்தில் இந்நாடுகளுக்கு நியூசிலாந்தும் அவுஸ்திரேலியாவும் இராணுவ உதவி அளிப்பதென முடிவுசெய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

## பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவி நிறுத்தப்படவேண்டும்

### அமெரிக்க அதிபர் பதவி வேட்பாளர் சொல்கிறார்

வாஷிங்டன், ஏப். 17

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் எல்லாவிதமான உதவிகளையும் நிறுத்த வேண்டுமென செனட்டர் எட்மன் பஸ்கி அமெரிக்க அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

ஜனநாயகக்கட்சிச்செனட்டரான இவர் வரும் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட இருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது பாகிஸ்தானுக்கு கொடுக்கப்பட்ட அமெரிக்க ஆயுதங்களால் அப்பாவி மக்களை கிழக்குவங்காளத்தில் கொன்று குவிக்கின்றனர். அங்கு இரத்தக்களரி ஏற்படுவதைத் தடுக்கவும் பதட்டநிலைமையை நிறுத்தவும் அமெரிக்க உதவி நிறுத்தப்படவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு வங்காளத்தில் நடக்கும் சம்பவங்களையிட்டு நேபாள இளைஞர் ஸ்தாபனம் கவலை தெரிவித்துள்ளது அரசாங்க சார்பான இந்த ஸ்தாபனம் கிழக்கு வங்காளத்தில் நடைபெறும் இனக்கொலையை நிறுத்தி சமாதானம் ஏற்பட வழிசெய்யுமாறு பாகிஸ்தான் அரசைக்கேட்டுள்ளனர்.

மேற்கு ஜேர்மனி அரசாங்கம் கிழக்குவங்காளமக்களுக்கு நிவாரண உதவி அளிக்க முன்வந்துள்ளது. இதற்காக 40 ஆயிரம் மார்க்கை அது ஒதுக்கியுள்ளதெனகொலோ ரேடியோ அறிவித்தது.

ஷேக்கின் ஆதரவாளர்கள்

## மின்சாரநிலையத்தை தகர்க்கும் முயற்சி முறியடிக்கப்பட்டது

புதுடில்லி, ஏப். 17

கிழக்கு வங்காளத்தில் உள்ள இரு மின்சார நிலையங்களை ஷேக் முஜிபுர் ஆதரவாளர்கள் தகர்க்கச் செய்த முயற்சியை பாகிஸ்தான் துருப்புக்கள் முறியடித்துள்ளதாக பாகிஸ்தான் வானொலி அறிவித்தது.

கிழக்கு வங்காளத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மேற்குப்பாகிஸ்தானியரின் இறுதிக் காவல் நிலையமான சலாட்டிஹார் விமான நிலையத்தை சேக் முஜிபுர் ஆதரவுப்படைகள் முற்றுகையிட்டுள்ளதாக இந்திய வானொலி தெரிவித்தது.

அது மேலும் தெரிவித்ததாவது! இவ்விமான நிலையத்தின்மீது முஜிபுர் ஆதரவுப் படைகள் மும்முனைத்தாக்குதல்கள் தொடுத்திருக்கின்றன இவ்விமான நிலையத்தில் வெளியிலிருந்து எவ்வித ஆதரவும் பெறமுடியாத நிலையில் 800 பாகிஸ்தானியத் துருப்புக்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர்

இவ் விமான நிலையத்தின் ஓடு பாதைகள் கடும்தாக்குதல்களுக்குள்ளாகியிருப்பதால் விமானங்கள் இறங்க முடியாமல் இருக்கின்றன. இதனால் இப்பொழுது பாகிஸ்தான் விமானங்கள் இவ் விமானநிலையத்தில் இறங்கவில்லை எனத் தெரிய வருகிறது இதே நேரத்தில் வங்காளத்தின் கிழக்கு அரங்கில் கடும் தாக்குதல்கள் நடைபெறுவதாக எல்லைக்கப்பாலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

மைமன்சிங், பிரமன்பாடியா போன்ற இடங்கள் மீது பாகிஸ்தான் விமானங்கள் குண்டு வீசித்தாக்குதல் நடத்துவதோடு விமானங்கள் தாழப்பறந்து மக்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததால் பாமரமக்கள் மீது பலர் கொல்லப்பட்டனர். கொமிலா, டாக்கா நகர்மீது பாகிஸ்தான் துருப்புக்கள் தாக்குதல் நடத்தினர். தாக்குதல்களுக்குத் தப்பிஓடும் மக்கள்மீது விமானங்கள் தாழப்பறந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றன. இதில் 500 பேர் கொல்லப்பட்டனராம். எல்லையோரப் பகுதிகளில் துருப்புக்கள் நடத்தும் தாக்குதல்களிலிருந்து தப்பிய பொதுமக்கள் திகவுராப் பகுதி நோக்கி வந்தவண்ணம் இருக்கின்றனர்

பாகிஸ்தான் துருப்புக்களை நேருக்குநேர் நின்று எதிர்த்து வந்த சேக்முஜிபுர் படைகள் இப்பொழுது தம் போர்முறையை மாற்றியுள்ளன. அவர்கள் கொரிலா போர்முறையை ஆரம்பித்துள்ளனர்

இதனால் நகரில் சிலரை விட்டுச் சென்றுள்ள அவர்கள் நகர்ப்புறங்களில் பாகிஸ்தான் துருப்புக்களை எதிர்த்துப் போராடுவதற்குச் சென்றுள்ளனர். ரங்பூர் பகுதியிலுள்ள காட்டு ரேயாப் பகுதியிலுள்ள சலாடங்காவுக்கு 50 கிலோ மீற்றர் தொலைவில் பாகிஸ்தானியத்துருப்புக்கள் கடும் போர் புரிந்து வருகின்றனர்.

கிழக்கு வங்காளத்தில் அறுவடைக்குத் தயாராக இருக்கும் பயிர்களை நாசம் செய்யும் முயற்சியில் பாகிஸ்தான் ஹெலிகாப்டர்கள் இறங்கியுள்ளன. ஹலோ பாலத்தை பாகிஸ்தானியத் துருப்புகள் கடக்கமுயற்சி செய்து வருகிறன்றனர். இவர்கள் முயற்சியை சேக் முஜிபுர்படைகள் தடுத்து நிறுத்தியுள்ளன.

பிரமன்வாரியாவில் குண்டு வீச்சில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் விமானப்படை விமானங்கள் மூன்றை சேக் முஜிபுர் ஆதரவாளர்கள் சுட்டுவீழ்த்தினர்.

### பாரதம் மறுப்பு

பாரத அரசு மீது பாகிஸ்தானியர் நடத்திவரும் இனக்கொலையையும், மனிதாபிமானமற்ற செயலையும் மறைத்துவிட முடியாது. கிழக்குவங்காளத்தில்பாகிஸ்தானியர் செய்யும் கொடுமைகளை சர்வதேச பார்வையாளர்கள் பார்த்துக் கொண்டே சென்றுள்ளனர். என இந்திய ராஜாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

— —

### சோவியத் ஜனத்தொகை 24 கோடி 14 லட்சம்

மாஸ்கோ, ஏப். 17

சோவியத் யூனியன் மக்கள் தொகை 24 கோடியே 14 லட்சமாகும். 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் எடுத்த கணக்கெடுப்பின்படி இந்த ஜனத்தொகையில் பெண்கள் 13 கோடியும் ஆண்கள் 11 கோடியுமாகும். சோவியத்தில் பிறப்பு விகிதம் இம்முறை குறைந்திருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேஜாவுக்கு ரிமாண்ட்

புதுடில்லி, ஏப்ரல் 17

பிரபல கப்பல் கம்பனித் தலைவர் தர்மதேஜாவை 14 நாட்கள் ரிமாண்டில் வைக்குமாறு நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

10 லட்சம் டாலர் பண மோசடி செய்த திரு. தர்ம தேஜா லண்டனில் கைது செய்யப்பட்டிருந்தார். இவரது மோசடியை ஆராய இவரை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பிவைக்குமாறு பிரிட்டிஷ் அரசை இந்திய அரசு பல முறை கேட்டிருந்தது.

திரு. தேஜாவை பிரிட்டிஷ் அரசு இந்தியாவிற்கு அனுப்பிவைக்க இணங்கியதை அடுத்து, பலத்த பாதுகாப்புடன் விமான மூலம் அவர் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டார். விமான நிலையத்தில் வந்திறங்கியதும் உடனடியாக மாவட்ட நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டார்

தனது உடல்நிலை சரியில்லாதிருப்பதினால் ஏ வகுப்புச் சிறையில் தான் இருக்க அனுமதிக்கும்படி நீதிபதியை அவர் கேட்டுக்கொண்டதற்கு நீதிபதி அனுமதி அளித்தார். ......

### யமனுகவந்த கண்ணாடி

யாழ்ப்பாணம், ஞாயிறு

கண்ணாடி வெட்டியதை தொடர்ந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கணபதிப்பிள்ளை பூபாலராஜா என்பவர் மரணமானார். கண்ணாடி வெட்டியது சம்பந்தமாக பொலிஸார் விசாரணை செய்தனர். மரணவிசாரணை அதிகாரி திரு என். இராசநாயகம். இயற்கைமரண மென தீர்ப்பளித்தார்.

வங்காள தேசத்தை

## தனிநாடாக அங்கீகரிக்க பிரிட்டனிடம் கோரிக்கை

லண்டன், ஏப். 17

கிழக்குவங்காளத்திலுள்ள பெரும்பாலான கிராமப்புறங்கள் சேக் முஜிபுர் ஆதரவாளர்களிடமே இருப்பதாக அவாமி தூதுவர் ஒருவர் லண்டனில் தெரிவித்தார்.

லண்டன் பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்சேக் முஜிபுர் வார்த்தைகளுக்கே மக்கள் இப்பொழுதும் மதிப்புக் கொடுத்து வருகிறார்கள். அவரின் ஆணையை ஏற்று அவர்கள் போராடி வருகிறார்கள். பருவமழை ஆரம்பித்தால் அதுபாகிஸ்தானிய துருப்புக்களுக்குப் பெரும் சங்கடமாகவே இருக்கும் என்று கூறிய திரு சுக்காமியா வங்காள தேசத்தை தனிநாடாக அங்கீகரிக்குமாறு பிரிட்டனைக் கோரவே தான் லண்டன் வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

### பாவனையாளரே பாதை அமைத்தனர்

சுழிபுரம், சனி

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த இருபது குடும்பங்கள் தமது ஒழுங்கையை சொந்திப் பணத்தில் நவீன பாதையாக செப்பனிட்டுள்ளனர்.


சகல வேலைகளையும் அவ் ஒழுங்கையிலுள்ள வாலிபர்களே செய்துள்ளனர். அண்மைக் காலத்தில் சுழிபுரம் பகுதியில் செப்பனிடப்பட்ட ஒழுங்கைகளுக்கு இது ஒரு முன்மாதிரியான பாதையாக அமைக்கப்பட்டுள்ளது

### 2 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள ஸ்தாபனமொன்றில் சுமார் 900 ரூபா பெறுமதியான கண்ணாடிகளை திருடியதாக குற்றம் சாட்டி தொடரப்பட்டவழக்கில் ராஜரத்தினம் என்பவருக்கு 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 2 வருட நன்நடத்தை பிணையும் விதித்து யாழ். மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார்.

SONY
2R-29




ஸோனி பாக்கெட் ட்ரான்சிஸ்டர் ரேடியோ
சிடில்ஸ் சினிரேடியோ
9, 10, கொன்சிஸ்டரி கட்டிடம்,
பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
தொலைபேசி 27311
கிளைகள் கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, அம்பலாந்தோட்டை, பம்பலப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தெய்வ சாந்நித்யம் இன்றி வாழ்க்கைக்கு பொருளில்லை; எல்லா சாந்திக்கும், எல்லா ஆனந்தத்திற்கும், எல்லா பாதுகாப்பிற்கும் மூலாதாரமான இந்த சாந்நித்யத்தை உன்னுள் உணர்வாயேல் உன்னுடைய கஷ்டங்கள் அனைத்தும் மறைந்துபோம்.

— ஸ்ரீ அன்னை.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffra Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷ சித்திரை மாதம் 5-ந் திகதி ( 81 - 4 - 71)


## படிப்பினை தேவை

பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகாவின் 'ரோஸ்மிட் பிளேஸ்' வாசஸ்தலத்தைக் குண்டு வீசித் தகர்த்துப் பிரதமரைக் கொலை செய்ய அல்லது கடத்திச் செல்லத் திட்டமிட்டதாக இலங்கை வானொலியின் ஒலிபரப்பில் ஒலிபரப்பப்பட்ட ஒரு சித்திரம் தெரிவித்தது 1789-ம் ஆண்டில் பாரிசில் நடைபெற்ற புரட்சியின்போது திட்டமிடப்பட்ட தாக்குதல் போன்று நமது இளம் பயங்கரவாதிகள் ஏப்ரல் ஐந்தாந் திகதி ரோஸ்மிட் பிளேஸ் பிரதமரின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்த குறி வைத்திருந்தபோதிலும் எண்ணியபடி முழு அளவில் பயங்கரவாதிகள் வந்துசேராததினால் தாக்குதல் திட்டம் பிசுபிசுத்துப்போக நேர்ந்தது மட்டுமல்ல பிரதமரைக் கொலை செய்யும் திட்டமும் தோல்வியில் முடிவடைந்ததாம்.

பிரதமரின் உயிருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாததையிட்டு மக்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள். அரசியலில் கருத்து வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். இதற்கு வன்முறையும் உயிர்ப்பலியும்தான் ஒரே வழியென்பதை நாகரிகம் தெரிந்த நாடு ஏற்றுக்கொள்ளவேமுடியாது.

நமது நாட்டில் இப்பொழுது நடைபெற்று ஓய்ந்துவரும் சம்பவங்களும் ஒரு புரட்சிச் சதி முயற்சியேயாகும். எங்கள் நாடு சமீப காலத்தில் புரட்சிச் சதிமுயற்சிகளுக்குப் பெயர்பெற்று வந்திருக்கிறது என்று கூடச் சொல்லலாம். கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்த இளைஞர்களுக்கு வன்முறைப் புரட்சியில் பயிற்சியளிக்கப்பட்டதென்பதுதான் இச்சதித்திட்டத்தின் உச்சக்கட்டமாகும். கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் சில தினங்களுக்கு முன் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த ஒரு வேண்டுகோளில் நாட்டின் தவறான கல்வித்திட்டமே இன்றைய 'நாடகத்தின் வில்லன் என்று சரியாகக் குறிப்பிட்டிருந்தார் கல்வித்திட்டம் பற்றி இப்போதுதான் அதுவும் இன்றைய கல்வி அமைச்சர் மட்டும்தான் சரியாக உணர்ந்து கூறியிருக்கிறார் என்று கொள்ளக் கூடாது. கல்வி அமைச்சர் போன்றவர்களும் கல்விமான்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் பாடசாலை கல்லூரிகள் ஆகியவற்றின் வருடாந்தப் பரிசளிப்பு விழாக்களில் மேடைகளில் நின்று குரல் கொடுத்துவரும் விஷயம் தான் இது.

கல்வி சம்பந்தமாக

சபைக் காலத்தில் நியமிக்கப்பட்ட விசேஷ கமிட்டியொன்று [கமிட்டிகளுக்கும் கமிஷன்களுக்கும் கூட நமது நாடு பெயர் பெற்றதுதான்!] அந்தக் காலத்தில் கல்விச் சீர்கேடுகள் பற்றி விளக்கமாகத் தெரிவித்து அவற்றை நீக்குவதற்குத் தெளிவான சில யோசனைகளையும் தெரிவித்திருந்தது. அந்தக் கமிட்டி தயாரித்த அறிக்கை இன்றும் போற்றிப் பாதுகாத்து வைக்கப்படவேண்டிய மகத்தான சாஸனம் என்றுகூடச் சொல்லலாம் ஆனாலும் சட்ட சபைக் காலம் முடிந்து ஆட்சிமன்றக்காலம் ஏற்பட்ட சுதந்திரத்தின் பின்னரும் ஆட்சிபீடத்துக்கு வந்த அரசாங்கங்கள் எங்கள் பாடசாலைகளில் கல்விப் போதனை முறையிலும் பாடத்திட்ட முறையிலும் புரட்சிகரமான மாறுதல்களை அரசாங்கமே வழிவகுக்க வேண்டுமென்ற யோசனையைப் பற்றி அக்கறை கொண்டிருந்தால் இன்றைய பெரும் நெருக்கடி தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

இன்று அதாவது முப்பது வருடங்களின் பின்பு எங்கள் பாடசாலைகளிலுள்ள நிலைமை என்ன? எங்கள் மாணவர்கள் ஆடுமாடுகள்போன்று இன்றைய வகுப்புமுறைகளால் பிரித்துவிடப்பட்டிருக்கின்றனர், என்ஜினியர்களாகவும் டாக்டர்களாகவும் படித்துப்பட்டம் பெற்று வெளியேறியவர்களுக்கும் கூட வேலைவாய்ப்புக் கிடைக்கவில்லையென்பதை அறியாமலும் தங்கள் பிள்ளைகள் தகுதியுடையவர்கள் தானா என்பதைச் சிந்திக்காமலும், தங்கள் பிள்ளைகளுக்கு விஞ்ஞானக் கல்விதான் அளிக்கப்படவேண்டும் என்று பெற்றோர் ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். பட்டப் படிப்புத் தராதரப் பத்திரங்களை அரசாங்கம் வழங்குகின்றது. நெல்லுடன் பதரும் சேர்வதுபோல் பத்திரங்களுடன் வெளியேறுகிறார்கள். ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதுபோல் கலைப்பட்டதாரிகள் பெருமளவில் வெளியே நடமாடித் திரிவதற்குக் குதிரைப்பந்தயத் திடல் பல்கலைக்கழகம் காரணமாக இருப்பதை நாம் அறியவில்லையா? இப்படி ஓடிய வெள்ளம் இன்று அணைகளையும் உடைத்துக் கொள்ளும் நிலையில் நாட்டையே நெருக்கடிக்குள்ளாக்கவில்லையா?

அரிவரி முதல் பல்கலைக்கழகம்வரை இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் எமது நாட்டில்தான் இருக்கிறதென்று பெருமை பேசிவருகின்றோம். இத்திட்டம் உருவாக்கியுள்ள சாதனைதான் என்ன? போதனைமொழி சுயபாஷைக்குமாற்றப்பட்டது. பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றது, சோஷலிஸத்தை யதார்த்தமாக்க முற்பட்டது. இத்தனையும் சாதித்தசாதனைகள் எவை?

பாடசாலைகளை அரசாங்கம் கையேற்று பத்துவருடங்கள் நிறைவேறியபின்னரும் தேசிய கல்வித்திட்டம் பற்றி இன்னமும் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

இவை யெல்லாவற்றின் மொத்தவிளைவு மக்கள் வறுமையில் உழல்வதும், இளைஞர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் விரக்தியின் எல்லையை அடைந்திருப்பதும் தான்!

எமது நாடு புத்தபிரானின் போதனைகளையும் மற்றும் புனிதமான மதங்களின் போதனைகளையும் செவிமடுத்து நடந்துவரும் நாடாக விளங்குவதால்தான் மிக மோசமான பேரழிவைத் தடுத்துள்ளதென்று சொல்ல வேண்டும். ஆனாலும் அழிவுக்கான ஆபத்து முற்றாக நீங்கிவிடவில்லையென்பதையும் மறந்துவிடலாகாது.

அரசாங்கத்தின் படைபலத்தால் புரட்சி இளைஞர்களுக்கு நன்கு பாடம் படிப்பிக்கப்பட்டுள்ளதென்பது உண்மையே. அதேசமயம் இளைஞர்கள் ஏன் இந்த இயக்கத்தில் ஈடுபட்டார்களென்பதைக் கொண்டும், நாடு இன்றைய அவலநிலைக்கு ஆளாகக் காரணம் என்ன என்பதையிட்டும் மக்களும், தலைவர்களும் அரசும் [illegible] கொள்ளவேண்டிய பாடமும் படிப்பினையும் நிறைய உண்டு.

## புதுச்சேரிக்கு முழு இராஜ்ய அந்தஸ்து

சென்னை, ஏப் 17

புதுச்சேரிக்கு முழு இராஜ்ய அந்தஸ்து வழங்க வேண்டுமென்று இராஜ்ய சட்ட சபை தீர்மானம்நிறைவேற்றியுள்ளது.

இந்தத் தீர்மானத்தை புதுச்சேரி முதன் மந்திரி ஜறுப் மரக்கார் முன்மொழிந்தார். ஏகமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

## சமண சமயத்தலைவர் மறைவு

புதுடில்லி ஏப் 17

அகில இந்திய சமணத்தலைவர் திரு பரமானந்தஜீ கபாலியா இன்று மரணமானார்

ஸ்ரீ கபாலிய பிரபுத்தஜீவன் என்னும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் கடமைபுரிந்துள்ளார்

## சுவீப் முடிவுகள்

இம்மாம் 15-ம் திகதி இழுக்கப்பட்ட 342-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
02 G 0547 ரூ. 100,000

இரண்டாவது பரிசு
19 L 0415 ரூ. 40,000

மூன்றாவது பரிசு
09 X 0095 ரூ. 10000

தலா ரூபா 500 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள்.

| | | | |
|---|---|---|---|
| 03 Q 0556 | 41 N 0061 | 38 K 0570 | 31 Y 0154 |
| 25 L 0044 | 29 F 0477 | 23 A 0912 | 41 W 0285 |
| 18 Y 0657 | 33 Q 0644 | 12 S 0339 | 09 H 0535 |
| 15 P 0605 | 14 H 0836 | 20 P 0377 | 35 L 0797 |
| 13 T 0544 | 33 U 0664 | 15 K 0628 | 20 X 0086 |
| 37 K 0794 | 30 F 0291 | 39 N 0785 | 16 B 0275 |
| 29 E 0233 | 08 Y 0389 | 16 Z 0411 | 33 T 0371 |
| 38 L 0066 | 24 L 0017 | 02 E 0359 | 30 Q 0330 |
| 13 L 0382 | 35 J 0889 | 24 D 0150 | 31 H 0526 |
| | | 33 B 0183 | 32 M 0960 |
| | | 11 U 0398 | 24 D 0079 |
| | | 27 B 0352 | 01 C 0604 |
| | | 04 T 0425 | 14 G 0307 |
| | | 31 K 0377 | 19 U 0842 |
| | | 36 T 0420 | 21 G 0094 |
| | | 30 F 0351 | 11 U 0153 |
| | | 40 P 0769 | 28 [illegible] 0420 |
| | | 36 Z 0716 | 26 G 0887 |
| | | 15 A 0632 | 37 X 0272 |
| | | 29 J 0746 | 04 V 0091 |
| | | 29 B 0314 | 08 J 0149 |
| | | 21 Q 0689 | 37 X 0906 |
| | | 12 Q 0801 | 10 S 0452 |
| | | 24 V 0635 | 11 M 0395 |
| | | 07 Q 0516 | 06 O 0315 |
| | | 25 S 0441 | 30 S [illegible]933 |
| | | 23 Z 0156 | 27 R 02[illegible]0 |
| | | 20 M 0774 | 21 A 0584 |
| | | 03 Z 0586 | 15 O 0330 |
| | | 13 A 0015 | 23 Y 0581 |
| | | 38 M 0109 | 08 X 0349 |
| | | 24 N 0940 | 27 U 0864 |
| | | 22 B 0196 | 16 G 0461 |
| | | 17 E 0612 | 36 J 0505 |
| | | 01 N 0953 | 42 U 0618 |
| | | 23 D 0758 | 17 A 0870 |
| | | 34 X 0317 | 14 M 0080 |
| | | 16 Q 0574 | 5 P 0965 |
| | | 30 F 0664 | 37 C 0191 |
| | | 08 J 474 | 19 Q 0661 |
| | | 22 L 0997 | 22 J 0183 |

## பொலிஸ் நிலையங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன

கோட்டை, சனி

பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மேலும் பல பொலிஸ் நிலையங்களை அரசாங்க ஆயுதப்படைகள் மீண்டும் தமது ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்துள்ளன.

பயங்கரவாதிகள் பொது மக்களை தொடர்ந்து துன்புறுத்தி வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹக்மன, அக்குரஸ்ஸ பகுதியில் ஆயுதப்படைகள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியிருக்கிறார்கள். கேகாலைப் பகுதியில் புலத்கொகுபிட்டிய பொலிஸ் நிலையம் விடுக்கப் பட்டுள்ளதுடன் இது விரைவில் மீண்டும் திறக்கப்படும்.

மகோபகுதியில் பயங்கரவாதிகளின் முக்கிய செயலகமாக இருந்துவந்த வெட்டிய முல்லை பாடசாலை இப்பொழுது விடுவிக்கப்பட்டுள்ளது

எல்பிட்டியவில் பயங்கரவாதிகள் கொள்ளையடித்திருப்பதாகவும் செய்தி வெளியாகியுள்ளன. பொதுமக்கள் பயங்கரவாதிகளுக்கு அனுதாபம் காட்டாததனால் இப்பொழுது அவர்கள் உணவுப் பண்டங்களையும் கொள்ளையடிக்கிறார்களாம்.

கொழும்பில் பொதுமக்கள் அமைத்துள்ள செயற்குழுக்கள் பொருட்களின் விலைக்கட்டுப்பாட்டை நிலைநிறுத்தியிருக்கின்றன.

கலாசார கழகங்களும், மதஸ்தாபனங்களும் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்து நாசகார சக்திகளிலிருந்து நாட்டைக் காப்பாற்றவேண்டுமென பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன

இஸ்லாமிய சோஷலிச முன்னணியும் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பதிவு செய்த உதவி மருத்துவர்கள் சங்கம் நாட்டின் பாதுகாப்பின் நிமித்தம் உயிரிழந்தவர்கள் நிதிக்கு சங்க அங்கத்தவர் ஒரு நாள் சம்பளத்தை வழங்கவேண்டுமென்று கேட்டுள்ளது

## ஒத்துழைக்க வேண்டுகோள்

—தேரோ

கோட்டை, சனி

தேசிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்குச் சகல மக்களும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமென ஸ்ரீலங்கா ராமஞ்ஞ நிக்காய மகாநாயக தேரோ பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

திறைசேரியில் அரசாங்கம் பொறுப்பேற்ற பொழுது பொருள் இல்லாதிருந்த போதிலும் நாட்டின் அபிவிருத்திக்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. 2 வருடங்களுக்குப் பின்பே அரசாங்கத்தின் செயல்பற்றிய நன்மை தீமைகளைப்பற்றி அறிய முடியும் என்று தெரிவித்தார்.

## பத்து ஆண்டுகளில் மாநில சுயாட்சி

### கருணாநிதி நம்பிக்கை

சென்னை, ஏப். 17

மாநில சுயாட்சி இன்னும் பத்தாண்டுகளுக்குள் கிடைத்துவிடும் என்று தாம் நம்புவதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

சென்னையில பத்திரிகை ஸ்தாபனம் ஒன்று அளித்த வரவேற்பு விழாவில் திரு கருணாநிதி பேசினார்.

மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வழங்குவதினால் நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும்பலப்படும் என்று அவர் சொன்னார். தமிழ்நாடு சட்டசபையின் வலுவான எதிர்க்கட்சியொன்றில்லாதது குறித்து திரு கருணாநிதி கவலை தெரிவித்தார் ஜனநாயகம் சரியாகச் செயற்பட வலுவான எதிர்க்கட்சி இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் சபாநாயகர் திரு. மதியழகன் கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் ஆகியோர்களும் பேசினார்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org